# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 01 வியாழக்கிழமை 15.05.2025 கதிர் 195



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




## செம்மணி மனிதப் புதைகுழி: அகழ்வுப் பணிகள் ஆரம்பம்







யாழ்ப்பாணம், மே 15

யாழ். அரியாலை, செம்மணி – சித்துப்பாத்தி மயானத்தில் மனிதச் எச்சங்கள் அவதானிக்கப்பட்ட பகுதிகளில் இன்று வியாழக்கிழமை முதல் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

செம்மணி - சித்துப்பாத்தி மயானத்தில் கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காகக் குழிகள் வெட்டப்பட்டபோது அதற்குள் மனித என்புச் சிதிலங்கள் அவதானிக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி அப்பகுதியில் நீதிவான் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார்.

அவ்வேளை, மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியை ஸ்கேன் ஆய்வுக்கு உட்படுத்தவும், தொடர்ந்து அகழ்வுப் பணிகளை

7

### இலங்கையில் ஏற்பட்டுள்ள

## அரசியல் மாற்றத்தின் செய்தியை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்வது இராஜதந்திரிகளின் முக்கிய பொறுப்பு

### ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, மே 15

**இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தின் செய்தியைச் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் செல்வதும், சர்வதேச சமூகத்தின் முன் இலங்கையின் நற்பெயரை மேம்படுத்துவதும் தூதுவர்களின் பொறுப்பாகும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

**பல்வேறு நாடுகளுக்கான இலங்கையின் தூதுவர்களாக நியமிக்கப்பட்டுச் செல்லும் புதிய தூதுக்குழுத் தலைவர்களுடன் இன்று வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இக்கருத்துக்களைத் தெரிவித்தார்.**

**வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு சேவைகளை வழங்குவதில் முன்னணியில் இருந்து சிறப்புக் கவனத்துடன் பணியாற்றுமாறும், எந்தவித பாகுபாடும் இல்லாமல் நியாயமாக செயல்படுமாறும் புதிய இராஜதந்திரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.**

இலங்கைத் தூதரகத்தை, இலங்கையர்கள் தமது இடமாக உணரும் வகையில் செயற்படுமாறு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டிற்கான தமது சேவையை செயற்திறன்மிக்க வகையில் மேற்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்கும், இலங்கையில் உள்ள தொழில்முனைவோர் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளைக் கண்டறிய உதவுவதற்கும் தேவையான ஒருங்கிணைப்பு இராஜதந்திர சேவையின் ஒரு பகுதியாகும் என்று ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்தார்.

அதன்படி, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது தூதுவரின் முக்கிய பொறுப்பாகும் என்றும், அதற்குத் தேவையான ஆதரவை வழங்க அரசு தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் நடந்த சில சம்பவங்களால் தூதுவர்கள் கடந்த காலங்களில் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர் என்றும், தற்போதைய அரசாங்கம் தூதுவர்களின் கௌரவத்தை பாதிக்கும்

எவற்றையும் செய்யாது என்றும் எந்த நேரத்திலும் தூதுவர்களுக்கு அரசு துணை நிற்கும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

7

## புதுக்குடியிருப்பில் இன்று முள்ளிவாய்க்கால் கஞ்சி

புதுக்குடியிருப்பு, மே 15

தமிழினப் படுகொலை வாரத்தின் ஐந்தாவது நாளான இன்று புதுக்குடியிருப்பு, கோம்பாவில் இளைஞர்களின் ஏற்பாட்டில் கோம்பாவில் கிராமத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

7



## ஜனாதிபதி மிரட்டுகின்றார்!

### குற்றஞ்சாட்டுகின்றார் சுமந்திரன்

கொழும்பு, மே 15

தங்களிடம் மூன்றிலிரண்டு (2/3 ) பெரும்பான்மை உள்ளதாகவும், தன்னிடம் நிறைவேற்று அதிகாரம் உள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மிரட்டுகின்றார் எனத் தமிழ் அரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், பதில் பொதுச்செயலாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி

7



## அம்பாறையில் மின்னல் தாக்கி ஆண் ஒருவர் பரிதாப மரணம்



அம்பாறை, மே 15

அம்பாறை மாவட்டம், தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விஜயபுர பகுதியில் மின்னல் தாக்கி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விஜயபுர, தமனேவெல பகுதியைச்சேர்ந்த 47 வயதுடைய நபரே இந்தச்

7

## புல்மோட்டை பாடசாலையில் மாணவர்கள் இருவர் மோதல்!

### ஒருவர் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில்



புல்மோட்டை, மே 15

புல்மோட்டைபாடசாலைமாணவர்கள் இருவருக்கிடையில் இன்று காலை ஏற்பட்ட கைகலப்பில் ஒரு மாணவன்சவரஅலகினால்கழுத்து அறுக்கப்பட்டு உயிராபத்தான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் நடைபெற்ற பாடசாலையில் ஜி.சீ.ஈ.

7


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# 2 வலம்புரி சங்குகளுடன் நால்வர் கைது



கொழும்பு, மே .15

விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த இரண்டு வலம்புரி சங்குகளுடன் நான்கு சந்தேக நபர்கள் ஜா-எல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 14.05.2025 அன்று மாலை, ஜா-எல பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு ஒன்றுக்கு, கிடைத்த ரகசிய தகவலின் பேரில், ஜா-எல நகரில் சோதனை நடத்தி, ரூ1 மில்லியன் ரூபாவுக்கு . விற்கத் தயாராக இருந்த 02 வலம்புரி சங்குகளுடன் 04 சந்தேக நபர்களைக் கைது செய்தனர். .

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் எல்பிட்டிய, பதுகிரிய மற்றும் ஹம்பாந்தோட்டை பகுதிகளில் வசிப்பவர்கள் என்றும், அவர்கள் 23 முதல் 26 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜா-எல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்



# பஸ் இறக்குமதிக்கு நிபந்தனை

கொழும்பு, மே .15

அடுத்த ஆண்டு முதல் பொதுப் போக்குவரத்திற்காக பஸ்களை இறக்குமதி செய்யும் போது பல நிபந்தனைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பான மற்றும் நவீனமான பேருந்துகளை மட்டுமே இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பொதுப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகளின் கீழ் இயங்குகின்றனவா? என்பதை ஆராயும் பணிகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# இலங்கைத் தாதியர்களுக்கு பல்கலைக்கழகம்

*கொழும்பு, மே .15*

*இலங்கையில் மிக விரைவில் தாதியருக்கான பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும் என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதியளித்துள்ளார்.*

*சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்று நாரஹேன்பிட்டை அபயாராம விகாரையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.*

*அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், இலங்கையில் தாதியர் பல்கலைக்கழகமொன்று நிர்மாணிக்கப்பட வேண்டும் என்பதில் அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் மிகவும் கடுமையான முன்னெடுப்புகளை மேற்கொண்டிருந்தார். தற்போதைக்கு தாதியர் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான சாத்தியம், அதன் சாதக, பாதகங்கள் குறித்து கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றது.*

*மிக விரைவில் பல்கலைக்கழகம் ஒன்றைத் தாபிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.*

*இந்நாட்டின் சுகாதார நிலையை மேம்படுத்த எதிர்வரும் நாட்களில் பல்வேறு பிரதேசங்களை மையப்படுத்தி 100 ஆரம்ப சுகாதார நிலையங்களை நிறுவவும் உத்தேசித்துள்ளோம் என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (ஐ)*





# விடுதலைப் புலிகளிடம் இருந்து மீட்கப்பட்ட நகைகளை ஆராய மகிந்த நடவடிக்கை



கொழும்பு, மே .15

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் இருந்த சந்தர்ப்பத்தில், அவர்களால் சேமிக்கப்பட்ட தங்க நகைகள் தொடர்பில் ஆராய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் இராணுவம் ஒரு விசேட நடவடிக்கையை மேற்கொண்டது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில சுட்டிக்காட்டியுள்ளார்.

மகிந்த ராஜபக்சவின் தலையீட்டால், 2014 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தின் போது, இந்த தங்கப் பொருட்கள் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

“தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடனான யுத்த முடிவின் பின்னர், முழு வடக்கு மாகாணமும் அரசாங்கப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வரப்பட்டது.

இராணுவத்தால் அப்போது கண்டுபிடிக்கப்பட்ட தங்கம், அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது குடும்பத்தினரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக பெறப்பட்டது என்று சிலர் குற்றம் சாட்டினர்.

உண்மையில், தங்கப் பொருட்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து திகதிகள் மற்றும் ஆதாரங்களுடன் தெளிவான வெளிப்படுத்தல் காணப்படுகிறது.

வங்கிகளில் உள்ள தங்கப் பொருட்களின் ஆவணங்களுடன்தொடர்புடையவர்களைத்தேடுவதற்காக இராணுவம் ஒரு பெரிய நடவடிக்கையை மேற்கொண்டது.

மகிந்தவின் தலையீட்டால், 2014 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தின் போது, இந்த தங்கப் பொருட்கள் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன.

இதன்போது தங்கம் தொடர்பான ஆவணங்கள் உரியவர்களால்கொண்டு வரப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டன.

இந்த நடவடிக்கையை நிரூபிக்க தெளிவான ஆவணங்களுடன்ஏராளமான ஆதாரங்கள்இணையத்தில் உள்ளன.

உரிமை கோரப்படாத நகைகளே இவ்வாறு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இவ்வளவு காலமும் இருந்து வந்தன.

இந்த நகைகளை தேர்தலை இலக்கு வைத்தே இராணுவத்திடம் இருந்து பெற்று பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கான ஒரு நகர்வை தற்போதைய அரசாங்கம் முன்னேடித்திருந்தது.

குறிப்பாக இராணுவமும் பொலிஸாரும் அண்ணன், தம்பி போன்றவர்கள் என்பதை நினைவில் நாம் கொள்ள வேண்டும்.

ஆனால், சமூகத்தின் பெரும்பான்மையானவர்கள் இன்னும் மகிந்த இந்த தங்கத்தை தனது நெருங்கிய குடும்ப நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டார் என்று நினைக்கிறார்கள்” என கூறியுள்ளார். (ஐ)

# தமிழின அழிப்பு நினைவுத் தூபி:

## கனேடிய தரப்பிடம் இலங்கை அரசு கடும் ஆட்சேபனை



கொழும்பு, மே .15

இனப்படுகொலை குற்றச்சாட்டுகள் மற்றும் கனடாவில் தமிழின அழிப்பு நினைவுத்தூபியை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டமை குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் எரிக்வோல்ஷிடம் தனது கடும் ஆட்சேபனையை வெளியிட்டுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சுக்குக் கனடாத்தூதுவரை இன்று அழைத்து வெளிவிவகார அமைச்சர் தனது கடும் ஆட்சேபனையை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளதாவது:-

“ஆதாரமற்ற இனப்படுகொலை குற்றச்சாட்டுகள்,அது தொடர்பில் நினைவுத்தூபியை ஸ்தாபிப்பதற்கு அனுமதி வழங்கியமை குறித்த இலங்கை அரசின் கடும் ஆட்சேபனையை இலங்கைக்கான கனடாவின் உயர்ஸ்தானிகரிடம் இன்று வெளியிட்டேன்.


இலங்கையின் பன்முகதன்மை கொண்டே சமூகங்களிடையே தேசிய ஒற்றுமை தேசிய நல்லிணக்கம் மற்றும் நீடித்த அமைதியை ஏற்படுத்துவதற்கான அரசின் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு இது தடையாகவும் விளங்கும் சிக்கலை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தேன்.” - என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

“இலங்கையில் நடந்த இறுதிக்கட்டப் போரின்போது, இனப்படுகொலை நடந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டானது, தேசிய அல்லது சர்வதேச அளவில் எந்தவொரு நம்பகமான அதிகாரியாலும்ஆதாரத்துடன்நிரூபிக்கப்படாததுடன், அவை தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்ட குற்றச்சாட்டுகள் என இலங்கை அரசு தொடர்ந்தும் வலியுறுத்துகின்றது.

இந்தப் பொய்யான கதையை இலங்கை முற்றிலும் நிராகரிப்பதுடன், கனடாவுக்குள் தத்தமது தேர்தல் ஆதாயங்களுக்காக இவ்வாறு பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளதாக நம்புகின்றது.

2021, ஏப்ரலில், கனடாவின் வெளிநாட்டு அலுவல்கள், வர்த்தகம் மற்றும் அபிவிருத்தித் திணைக்களம், இலங்கையில் இனப்படுகொலை நடந்ததாக எந்தவொரு கண்டுபிடிப்பையும் கனடா அரசு மேற்கொள்ளவில்லை என்பதை அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது” என்றுள்ளது. (ஐ)



# மாநகர சபை கூட்டணிக் கட்சிகளுக்குள் குழப்பம்




*வவுனியா , மே .15*

*வவுனியா மாநகர சபையில் ஜனநாயக தமிழ் தேசியக்கூட்டணியின் போனஸ் ஆசனம் யாருக்கு என பங்காளிக் கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.*

*குறிப்பாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்கு 3 ஆசனங்கள் கிடைத்த நிலையில், ஒரு போனஸ் ஆசனம்பெண் ஒருவரை நியமிப்பதற்கு கிடைத்திருந்தது.*

*குறித்த முதலாவது போனஸ் ஆசனம் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவிற்கு என முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.*

*தற்போது மாநகரசபையின் போனஸ் ஆசனத்தை தமக்கு தருமாறு புளொட் கோரியுள்ளது.*

*மாநகரசபையில் வட்டாரம் வென்ற புளொட் 2 உறுப்பினர்களையும், ஈபிஆர்எல்எப் ஒரு ஆசனத்தையும் கொண்டுள்ள நிலையில் தற்போதைய போனஸ் ஆசனத்தையும் புளொட் கோரியுள்ளது என ரெலோ தெரிவித்துள்ளது. அதற்கு ரெலோ மறுப்பு தெரிவித்துள்ளது.*

*எனினும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் செயலாளர் புளொட் அமைப்பாக இருப்பதால் அவர்களின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது.*

*இதனால் ரெலோ தரப்பு குழப்ப நிலையில் உள்ளதாகவும், விரைவில் கூடி கதைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.*

*இதேவேளை, குறித்த கூட்டணிக்குள் மேயர் தெரிவு மற்றும் போனஸ் ஆசனம் தொடர்பில் பாரிய முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் நம்பத்தகு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)*

# மசோதா விவகாரத்தில் கெடு விதித்த உச்சநீதிமன்றம்
# 14 கேள்விகளை எழுப்பிய ஜனாதிபதி!



கவர்னர்கள் அனுப்பும் மசோதாக்கள் மீது 3 மாதங்களுக்குள் ஜனாதிபதி திரவுபதி முர்மு முடிவெடுக்க உச்சநீதிமன்றம் காலக்கெடு விதித்து இருந்தார். இது தொடர்பாக உச்சநீதிமன்றத்திடம் 14 கேள்விகளை ஜனாதிபதி திரவுபதி முர்மு எழுப்பி உள்ளார்.

சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல், கவர்னர் ரவி காலம் தாழ்த்துவதாகக் கூறி, உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், "மசோதாவை கவர்னர்கள் அனுப்பி வைத்தால், அதன் மீது ஜனாதிபதி மூன்று மாதங்களில் முடிவெடுக்க வேண்டும்' என, கால நிர்ணயம் செய்தது.

மசோதா விஷயத்தில் முடிவெடுக்க ஜனாதிபதிக்கு, உச்ச நீதிமன்றம் இது போல் காலக்கெடு நிர்ணயித்தது, இதுவே முதல் முறை. இந்த விவகாரம் தொடர்பாக, இன்று (மே 15) உச்சநீதிமன்றத்திடம் ஆலோசனை கருத்தை பெறும் வகையில் 14 கேள்விகளை ஜனாதிபதி திரவுபதி முர்மு எழுப்பினார்.

ஜனாதிபதி அதிகரமான 143ஐ பயன்படுத்தி உச்சநீதிமன்றத்திடம் ஜனாதிபதி திரவுபதி முர்மு விளக்கம் கேட்டுள்ளார்.

ஜனாதிபதி மசோதாக்கள் மீது முடிவெடுக்க கவர்னருக்கு கால வரம்பு நிர்ணயிக்க முடியுமா?

அரசியல் சாசனம் காலவரம்பை நிர்ணயிக்காத நிலையில் உச்சநீதிமன்றம் எப்படி நிர்ணயிக்க முடியும்?

ஜனாதிபதி, கவர்னர்களுக்கான அதிகாரத்திற்கு மாற்றாக உச்சநீதிமன்றம்

## டில்லியில் புழுதிப்புயல் திடீர் வானிலை மாற்றம் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



டில்லியில் திடீரென வானிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. புழுதிப்புயல் ஏற்பட்டதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

டில்லியில் இன்று திடீரென வானிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. டில்லியில் காசியாபாத், நொய்டா உள்ளிட்ட பல பகுதிகள் புழுதிப் புயலால் பாதிக்கப்பட்டன. பல பகுதிகளில் தூசி படிந்திருந்தது.

புழுதிப் புயலால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது. அலுவலகம் செல்பவர்கள் கடும் சிரமம் அடைந்தனர். இந்தியா கேட் உட்பட டில்லியின் பல்வேறு பகுதிகளில் புழுதி புயலால் தூ சி படிந்திருக்கும் வீடியோ காட்சிகள் இணையத்தில் வெளியாகி உள்ளது.

இதனிடையே, மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என வானிலை மையம் எச்சரித்து உள்ளது. ஆபத்தான கட்டடங்கள் மற்றும் இடங்களில் இருந்து விலகியிருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு உள்ளனர். (ஐ)

## இந்தியா- மியான்மர் எல்லையில் பயங்கரவாதிகள் 10 பேர் சுட்டுக்கொலை



*இந்தியா- மியான்மர் எல்லையில் பயங்கரவாதிகள் 10 பேர் பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.*

*இந்தியா - மியான்மர் எல்லையில் பயங்கரவாதிகள் நடமாட்டம் இருப்பதாக உளவுத் துறைக்கு தகவல் வந்துள்ளது. இதனையடுத்து, நேற்று இரவு ராணுவ கிழக்கு கமாண்ட் பிரிவின் ஸ்பியர் கார்ப்ஸ், அசாம் ரைபிள்ஸ் படையினர் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர்.*

*அப்போது, இந்தியா–மியான்மர் எல்லையில் பகுதியில், மணிப்பூர் மாநிலம் சண்டல் மாவட்டத்தின் நியூ சம்டால் கிராமம் அருகே பயங்கரவாதிகள் உடன் துப்பாக்கிச் சண்டை நடத்தினர். இதில் பயங்கரவாதிகள் 10 பேர் கொல்லப்பட்டனர்.*

*இதுதொடர்பாக பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கூறியதாவது: தேடுதல் நடவடிக்கையின் போது, பாதுகாப்பு படையினருக்கும், பயங்கரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. பயங்கரவாதிகள் 10 பேர் கொல்லப்பட்ட இடத்திலிருந்து ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள் மீட்கப்பட்டன.*

*இந்த சம்பவம் தொடர்பான கூடுதல் விவரங்கள் விரைவில் வெளியிடப்படும். பயங்கரவாதிகளைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். (ஐ)*





## ஊட்டி மலர் கண்காட்சி இன்று துவக்கம்!

ஊட்டி மலர் கண்காட்சி இன்று துவங்கியது. மலர் கண்காட்சியில், கண் கவரும் மலர் அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டம், ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில், 127 வது மலர் கண்காட்சி துவங்கியது. வரும், 25ம் தேதி வரை மலர் கண்காட்சி நடக்கிறது. நட்பாண்டின் சிறப்பு அம்சமாக பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் கவரும் வகையில், 'ஜெர்மனியம், சைக்ளோபின், பால்சம், ஆர்னமெண்டல் கேல், ஓரியண்டல் லில்லி,பேன்சி, மெரி கோல்டு, ஜினியா, டெல் ஃபூனியம்,' உட்பட, 275 வகையான விதைகள், செடிகள் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து பெறப்பட்டு, மலர் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு பூங்காவில் பல்வேறு பகுதிகளில், 7.50 லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டது.

அதில், தற்போது வண்ண மலர்கள் பூத்து ரம்மியமாக காட்சி அளிக்கின்றன. மேலும், மலர் மாடம் உட்பட பல இடங்களில், 30 ஆயிரம் மலர் தொட்டிகள் சுற்றுலா பயணிகள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

விழாவில், நடப்பாண்டின் சிறப்பு அம்சமாக, சோழர் பரம்பரையின் பெருமை குறித்து விளக்கும் வகையில் ராஜராஜ சோழனின் அரண்மனை, கரிகாலனால் கட்டப்பட்ட கல்லணை, அன்னபறவை படகு போன்ற உருவங்கள், 2 லட்சம் மலர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா பயணிகள் குழந்தைகளை கவரும் வகையில் தாவரவியல் பூங்கா முழுவதும் வண்ண விளக்குகள் மற்றும் தோரணங்களால் அழகுப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, 200 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

# ஹிட்லர்கள் ஒருபோதும் மரிப்பதில்லை!




தோழிகளே வணக்கம். என் பெயர் ஆன் ஃப்ராங்க் **(Anne Frank)**. 1929ம் ஆண்டு ஜெர்மனியின் ஃப்ராங்க்ஃபர்ட் நகரில், ஓட்டோ ஃபிராங்க் எடித் ஆகியோரின் இளைய மகளாகப் பிறந்தேன். என் அக்கா மார்காட். வசதி படைத்த குடும்பம் எங்களுடையது. ஜெர்மனி, நாஸிகளின் கட்டுப்பாட்டுக்கு வந்தவுடன் ஃப்ராங்க்ஃபர்ட்டிலிருந்து நெதர்லாந்தில் உள்ள ஆம்ஸ்டர்டாமுக்கு என் குடும்பம் குடிபெயர்ந்தது. அப்போது எனக்கு வயது 4. அப்பாவும் அம்மாவும் படித்தவர்கள். எங்களை அருமையாக வளர்த்தார்கள்.

என்னுடைய 13வது பிறந்தநாள் அன்று மிகவும் பிடித்த ஒரு பரிசு கிடைத்தது! தடித்த அட்டை கொண்ட அந்த டயரியைக் கண்டதும் என் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை! சராசரி பெண்களைப் போல் இதில் கண்டதையும் எழுதக் கூடாது என்று முடிவு செய்தேன். இந்த டயரியில் நான் எழுதப் போகும் விஷயங்களுக்கு ஓர் அர்த்தம் இருக்க வேண்டும் என்று விரும்பினேன். எனக்கு நண்பர்கள், அக்கா, அம்மா, அப்பா இருந்தாலும் இன்னும் நெருக்கமான ஒரு நண்பன் வேண்டும். அதுதான் இந்த டயரி. இன்று முதல் கிட்டி என்று பெயர்கொண்ட என் நண்பனிடம் நான் எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்ளத் தீர்மானித்தேன்.



டயரி எழுத ஆரம்பித்த சில நாள்களுக்குள் அந்தக் குலை நடுங்க வைக்கும் சம்பவம் நிகழ்ந்தது. ஆம், நாங்கள் எங்காவது தலைமறைவாகச் சென்று வாழ வேண்டும். அல்லது வதை முகாம்களுக்குச் செல்ல வேண்டும். எதற்காக?

நாங்கள் யூதர்கள். எங்கள் மதச் சின்னமான மஞ்சள் நட்சத்திரத்தை நாங்கள் எப்போதும் அணிந்திருக்க வேண்டும். சைக்கிளை ஓட்டிக்கொண்டு செல்லக்கூடாது. தள்ளிக்கொண்டுதான் நடக்க வேண்டும். டிராம்கள், வாகனங்களில் நாங்கள் பயணம் செய்யக்கூடாது. யூதர்களின் கடைகளில் மாலை 3 முதல் 5 மணிக்குள் மட்டுமே பொருள்களை வாங்க வேண்டும். 8 மணிக்கு மேல் வெளியே வரக்கூடாது. சினிமா, நாடகம் பார்க்கக்கூடாது. பொழுதுபோக்கு மட்டுமின்றி, டென்னிஸ், நீச்சல், ஹோக்கி போன்ற விளையாட்டுகளும் நாங்கள் விளையாடக்கூடாது. குறிப்பாக யூதர்களுக்கான தனிப்பட்ட பள்ளியில் மட்டுமே நாங்கள் படிக்க வேண்டும்.

ஜெர்மனியின் நாஸிப் படை நெதர்லாந்தைக் கைப்பற்றியவுடன் இங்கும் அதே சட்டங்கள் தொடர்ந்தன. என் அப்பா கஷ்டப்படும் யூதர்களுக்கு உணவு, உடை, பணம் போன்ற உதவிகளைச் செய்து வந்தார். இந்தச் செயல்கள் எல்லாம் எங்களுக்கு எவ்வளவு ஆபத்தைக் கொண்டுவரும் என்று எல்லோருக்கும் தெரியும். இன்னொருவரைக் காப்பாற்ற முடிந்தால் மற்ற விஷயங்கள் அற்பமானவை என்பார் என் அப்பா.

என் அக்காவுக்குத்தான் அன்று சம்மன் வந்தது. சம்மன் வந்தவர்களை ரகசிய வதை முகாம்களுக்கு அழைத்துச் சென்றுவிடுவார்கள். அந்த வதை முகாம்களைப் பார்த்துதான் நரகம் என்ற வார்த்தை உருவாக்கியிருப்பார்கள் என்று எண்ணுகிறேன். சரியான உணவு, உடை கொடுக்க மாட்டார்கள். நூறு பேருக்கு ஒரு கழிப்பறைதான் இருக்கும். தண்ணீர் பற்றாக்குறை. ஆண்களையும் பெண்களையும் ஒன்றாக குறுகிய இடத்தில் அடைத்திருப்பார்கள்.

மனித தன்மை அற்ற அந்த முகாம்களில் ஒழுக்க விதி மீறல்கள் அதிகமிருக்கும். சிறுமிகள் கூட கர்ப்பமாக இருப்பார்கள். தினமும் சிலர் செத்துக்கொண்டிருப்பார்கள். பலர் சாவை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். சுகாதாரமின்மையால் நோய்கள் உற்பத்தியான வண்ணம் இருக்கும்.

அம்மாவும் அப்பாவும் நண்பர்களிடம் பேசினார்கள். நானும் அக்காவும் புத்தகங்கள், பேனா, பென்சில் போன்றவற்றை எடுத்துக்கொண்டோம். ஒவ்வொருவரும் அணிந்திருந்த ஆடைகள் மீது மேலும் 2, 3 உடைகளை அணிந்துகொண்டோம். (பெரிய பைகளுடன் சென்றால் எங்களைக் கண்டுபிடித்துவிடுவார்கள்!)


சிறிது நேரப் பயணத்துக்குப் பிறகு ஒரு பெரிய கட்டடத்துக்கு வந்து சேர்ந்தோம். இது என் அப்பாவின் அலுவலகம். இந்த அலுவலகத்தின் மேல் தளங்களில்தான் நாங்கள் ரகசியமாகத் தங்கப் போகிறோம். நாங்கள் இங்கே வருவோம் என்று அப்பா ஏற்கெனவே தீர்மானித்து இருந்தபடியால் உணவு, படுக்கை என்று பல பொருள்களைச் சேர்த்து வைத்திருந்தார். எங்களுடன் அப்பாவின் நண்பர் வாண்டான் குடும்பமும் மருத்துவர் ஒருவரும் தங்கினர். 8 பேர் இந்தச் சிறிய இடத்தில் வசித்தோம்.

இப்போது நாங்கள் தலைமறைவு வாழ்க்கை நடத்துகிறவர்கள். பகல் நேரத்தில் ஜன்னல் திரையை விலக்கிக்கூட வேடிக்கை பார்க்க முடியாது. அலுவலக நேரத்தில் நாங்கள் எந்த வேலையும் மேலே செய்யக்கூடாது. வேகமாக நடக்கக்கூடாது. பேசக் கூடாது. சிரிக்கக்கூடாது. முக்கியமாக கழிவறையைப் பயன்படுத்தி, தண்ணீரை இறைக்கக்கூடாது. மொத்தத்தில் நாங்கள் இங்கே இருப்பது அங்கு வேலை செய்யும் சில நண்பர்களைத் தவிர, யாருக்கும் தெரியக்கூடாது.

> **இப்போது நாங்கள் தலைமறைவு வாழ்க்கை நடத்துகிறவர்கள். பகல் நேரத்தில் ஜன்னல் திரையை விலக்கிக்கூட வேடிக்கை பார்க்க முடியாது. அலுவலக நேரத்தில் நாங்கள் எந்த வேலையும் மேலே செய்யக்கூடாது. வேகமாக நடக்கக்கூடாது. பேசக் கூடாது. சிரிக்கக்கூடாது. முக்கியமாக கழிவறையைப் பயன்படுத்தி, தண்ணீரை இறைக்கக்கூடாது. மொத்தத்தில் நாங்கள் இங்கே இருப்பது அங்கு வேலை செய்யும் சில நண்பர்களைத் தவிர, யாருக்கும் தெரியக்கூடாது.**

காலை 8 மணிக்குள் எங்கள் வேலைகளை முடித்துக்கொள்ள வேண்டும். மீண்டும் ஏதாவது செய்ய வேண்டும் என்றால் உணவு வேளை வரை காத்திருக்க வேண்டும். அந்த ஒரு மணி நேரத்தில் வேகமாக வேலைகளை முடிக்க வேண்டும். மீண்டும் அமைதி. மாலை 5 மணிக்கு மேல் எங்கள் நாள் ஆரம்பமாகும்.

பகல் நேரங்களில் நானும் என் அக்காவும் பாடம் படிப்போம். சுருக்கெழுத்துப் பயிற்சி செய்வோம். பிரெஞ்சு, டச்சு, ஆங்கில மொழிகளைக் கற்போம். புராணங்கள், மன்னர்களின் வரலாறுகள் என்று நிறைய புத்தகங்களைப் படிப்போம். வானொலியில் செய்தி கேட்போம். மீதி நேரத்தில் என் நண்பன் கிட்டியிடம் அன்று நடந்த விஷயங்களைப் பகிர்ந்துகொள்வேன்.




புத்தகங்களின் அருமை எங்களைப் போல் தலைமறைவாக வசிக்கும் மனிதர்களுக்குத்தான் தெரியும்! புத்தகம் இல்லா உலகை என்னால் கற்பனை கூட செய்ய முடியாது. சனிக்கிழமை தோறும் நண்பர்கள் புத்தகங்கள், உணவுப் பொருள்கள் போன்றவற்றை ரகசியமாகக் கொண்டுவந்து தருவார்கள். அந்த நாளை நானும் அக்காவும் ஆர்வத்தோடு எதிர்பார்த்து காத்திருப்போம்!

ஒரு சிறிய இடத்தில் கருத்து ஒற்றுமை இல்லாதவர்களுடன் சேர்ந்து வசிப்பது சாதாரணமான விஷயம் ஒன்றும் (8ஆம் பக்கம் பார்க்க...)

# கனடா அமைச்சரவையில் இந்தியர்கள் 4 பேர்!



கனடா பிரதமர் மார்க் கார்னியின் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள 28 அமைச்சர்களில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 4 பேருக்கு இடம் அளிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலில் மார்க் கார்னி தலைமையிலான லிபரல் கட்சி பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. கனடாவில் இந்திய வம்சாவளியினர் அதிகம் வசித்து வரும் நிலையில், அதற்கேற்றாற் போல, அமைச்சரவையில் இந்தியர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

கனடா பிரதமர் மார்க் கார்னியின் அமைச்சரவையில் இந்திய வம்சாளியினரான அனிதா ஆனந்த், மனீந்தர் சித்து, ரூபி சஹோதா, ரந்தீப் சாராய் ஆகிய 4 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இந்திய வம்சாவளியான அனிதா ஆனந்த், 1967ம் ஆண்டு மே 20ம் தேதி கென்ட்விலேவில் பிறந்தார். இவரது தந்தை தமிழகத்தை பூர்வீகமாகக் கொண்டவர். தாய் பஞ்சாப்பை சேர்ந்தவர். கடந்த முறை தொழில்துறை, அறிவியல் மற்றும் புத்தாக்கத்துறை அமைச்சராக அனிதா ஆனந்த், 57, பதவி வகித்து வந்தார்.

தற்போது, முக்கிய துறையான வெளியுறவுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம், வெளியுறவுத்துறை அமைச்சராக ஒரு ஹிந்து முதல் முறையாக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்பாக, பொது சேவைகள் மற்றும் கொள்முதல் அமைச்சகம், பாதுகாப்புத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளையும் கவனித்து வந்துள்ளார்.

பிராம்டன் கிழக்கு தொகுதியில் இருந்து தேர்வு செய்யப்பட்ட மனீந்தர் சித்து, சர்வதேச வர்த்தகத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டார். அமெரிக்க அதிபர் டிரம்ப் வர்த்தக வரி உயர்வு அச்சுறுத்தலை மேற்கொண்டு வரும் நிலையில், இவரது துறையின் செயல்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

சித்து பஞ்சாப்பை பூர்வீகமாக கொண்டவர். சிறுவயதிலேயே பிராம்டனுக்கு குடும்பத்துடன் குடிபெயர்ந்தார். டோரன்டோ பல்கலையில் பட்டப்படிப்பை படித்து முடித்தார்.

குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கான மாநில செயலாளராக ரூபி சஹோதா, 44, நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 2015ம் ஆண்டு முதல் பிராம்ப்டன் வடக்கு தொகுதியில் இருந்து தேர்வு செய்யப்பட்டு வருகிறார்.


டொராண்டோவில் குடியேறிய பஞ்சாபி பெற்றோருக்குப் பிறந்தவர். சஸ்காட்செவன் பல்கலையில் பட்டப்படிப்பு படித்துள்ளார்.

ரந்தீப் சாராய், சர்வதேச மேம்பாட்டுக்கான மாநில செயலாளர்

ரந்தீப் சாராய், 59, கனடாவின் சர்வதேச மேம்பாட்டுக்கான மாநில செயலாளராக பதவியேற்றுக் கொண்டார். வெளிநாட்டு உதவி முயற்சிகள் மற்றும் உலகளாவிய கூட்டாண்மைகளை மேற்பார்வையிடுகிறார். அவர் சர்ரே மையம் தொகுதியில் இருந்து எம்.பி., ஆக தேர்வு செய்யப்பட்டுள்ளார். 2015ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக 4வது முறையாக எம்.பி.,யாகியுள்ளார்.

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் கார்னேவின் லிபரல் கட்சி மற்றும் கன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில் மொத்தம் 22 இந்திய வம்சாவளி எம்.பி.,க்கள் தேர்வு செய்யப்பட்டனர். (ஐ)

## போர் நிறுத்தம் வருமா? துருக்கியில் இன்று உக்ரைன்– ரஷ்யா நேரடி பேச்சுவார்த்தை!



போர் நிறுத்தம் ஒப்பந்தம் தொடர்பாக, துருக்கியில் இன்று (மே 15) உக்ரைன்- ரஷ்யா நேரடி பேச்சுவார்த்தை நடத்துகிறது.

ரஷ்யா- உக்ரைன் இடையே போர் நடந்து வரும் நிலையில், அதை நிறுத்த அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், இரு தரப்பிலும் தீவிர பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். இந்நிலையில், சில தினங்களுக்கு முன் இன்று (மே 15) நேரடி பேச்சுவார்த்தை நடத்தலாம் என உக்ரைனுக்கு ரஷ்ய அதிபர் புடின் அழைப்பு விடுத்து இருந்தார்.

இதையடுத்து, "மே 15ம் தேதி வியாழக்கிழமை துருக்கியில் புடினுக்காக நான் காத்திருப்பேன். தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்துவோம்" என புடின் அழைப்பை ஜெலன்ஸ்கி ஏற்றுக்கொண்டார். போர் நிறுத்தம் ஒப்பந்தம் தொடர்பாக, துருக்கியில் இன்று (மே 15) உக்ரைன்- ரஷ்யா நேரடி பேச்சுவார்த்தை நடத்துகிறது.

தற்போது துருக்கியில் இன்று நடைபெறும் பேச்சுவார்த்தையை புடின் புறக்கணிக்கிறார். அவர் தனது பிரதிநிதிகளை நேரடி பேச்சுவார்த்தைக்கு அனுப்பி வைக்க உள்ளதாக, ரஷ்ய ஊடகங்கள் தெரிவித்துள்ளது. இது குறித்து, உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ரஷ்யாவிலிருந்து யார் வருவார்கள் என்பதைப் பார்க்க நான் காத்திருக்கிறேன், பின்னர் உக்ரைன் எந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை நான் முடிவு செய்வேன். துருக்கியில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்வது குறித்து அதிபர் டிரம்ப் பரிசீலித்து வருவதாகவும் நான் கேள்விப்பட்டேன்.

ரஷ்யா போரையும், கொலைகளையும் நீட்டித்து வருகிறது. போர் நிறுத்தம் கொண்டு வர ரஷ்யா மீது அழுத்தம் கொடுக்கும் ஒவ்வொரு நாட்டிற்கும், ஒவ்வொரு தலைவருக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். அமைதி மற்றும் ராஜதந்திரத்திற்கு உதவும் அனைவருக்கும் நன்றி. இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ).

## பலுசிஸ்தான் பாகிஸ்தானுக்கு சொந்தம் இல்லை: விடுதலை அறிவித்த கிளர்ச்சி படைத்தலைவர்



'பலுசிஸ்தான் இனிமேல் பாகிஸ்தானுக்கு சொந்தமில்லை என அறிவித்துள்ள பலுசிஸதான் கிளர்ச்சி படையினர், தங்களுக்கு இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் உதவி செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாகிஸ்தானின் தென் மேற்கு பிராந்தியமான பலுசிஸ்தானை தனி நாடாக அறிவிக்கக்கோரி, நீண்ட காலமாக போராட்டம் நடக்கிறது. இப்பகுதி மக்கள் மீது பாகிஸ்தான் ராணுவம் அட்டூழியங்களை கட்டவிழ்த்து விட்டு வருகிறது. மனித உரிமை மீறல்கள் சர்வ சாதாரணமாக நடக்கிறது. அரசுக்கு எதிராக போராட்டம் நடத்துபர்கள் திடீரென மாயமாவது. அவர்களுக்காக போராடுபவர்களை ஒடுக்குவது, கொடூர கொலைகள் என பல நிகழ்வுகள் நடந்து வருகின்றன.

இதனையடுத்து பாக்., ராணுவம் மீது, 'பலுசிஸ்தான் விடுதலை ராணுவம்' என்ற கிளர்ச்சிப் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில், ஏராளமான ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டு உள்ளனர். அவர்களை சமாளிக்க முடியாமல் பாகிஸ்தான் ராணுவம் திணறி வருகிறது. பலுசிஸ்தானின் பல பகுதிகளை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியதோடு, அரசு அலுவலகங்களில் பாக்., கொடியை அகற்றி விட்டு பலுசிஸ்தான் கொடியை ஏற்றியுள்ளனர். தங்களை தனி நாடாக அங்கீகரிக்கும்படி, இந்தியா மற்றும் ஐ.நா.,வுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில் பலுசிஸ்தான்களின் பிரதிநிதியான மிர் யார் பலோச் என்பவர், மனித உரிமை மீறல், வன்முறை மற்றும் மாயமாகும் அப்பாவி மக்கள் காரணமாக பாகிஸ்தானில் இருந்து பலுசிஸ்தான் விடுதலை பெற்றுள்ளதாக அறிவித்து உள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவுகளில் கூறியுள்ளதாவது: பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள பலுசிஸ்தானில் மக்கள் வீதிகளில் இறங்கி போராடுகின்றனர். இனி பலுசிஸ்தான் பாகிஸ்தானுக்கு சொந்தமானது அல்ல என்பது அவர்களின் முடிவு. இனிமேல் உலகம் அமைதியாக இருக்க முடியாது.

இந்திய தேசபக்தி கொண்ட மீடியாக்கள், யூடியூபர்கள், இந்தியாவை பாதுகாக்க போராடுபவர்கள் பலுசிஸ்தானை சேர்ந்தவர்களை பாகிஸ்தான் மக்கள் என குறிப்பிட வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் பாகிஸ்தானியர்கள் அல்ல. பலு சிஸ்தானியர்கள். பாகிஸ்தானுக்கு உட்பட்ட பஞ்சாப் மக்கள், வெடிகுண்டுகளையும், திடீ ரென மாயமாவதையும், இனப்படுகொலையையும் சந்தித்தது கிடையாது.

ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருந்து பாகிஸ்தான் வெளியேற வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன். டாகாவில் 93 ஆயிரம் ராணுவ வீரர்கள் சரணடைந்து பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட அவமானம் மீண்டும் ஏற்படாமல் இருக்க, ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருந்து பாகிஸ்தான் வெளியேற வேண்டும் என சர்வதேச நாடுகள் வலியுறுத்த வேண்டும்.

பாகிஸ்தான் ராணுவத்தை தோற்கடிக்கும் திறமை இந்தியாவுக்கு உண்டு. ஆக்கிரமிப்பு காஷ்மீர் மக்களை மனித கேடயங்களாக பாகிஸ்தான் பயன்படுத்தி வருவதால், அங்கு ரத்த ஆறு ஓடினால் அதற்கு பாகிஸ்தான் ராணுவ தளபதிகள் பொறுப்பு ஏற்க வேண்டும்.

பலுசிஸ்தான் விடுதலையை சர்வதேச நாடுகள் அங்கீகரிக்க வேண்டும். பலுசிஸ்தான் குறித்த பாகிஸ்தான் கட்டுக்கதைகளை சர்வதேச நாடுகள் இனியும் நம்பக்கூடாது. வெளிநாட்டு சக்திகள் உதவியுடன் வலுக்கட்டாயமாக பலுசிஸ்தானை பாகிஸ்தான் இணைத்தது. இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் 60 வருட நிறைவையொட்டிநேற்று புதன்கிழமைவிஹாரமகாதேவி பூங்காவில் இடம்பெற்ற நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரையாற்றியிருந்தார்.

இந்த உரை குறித்து தமிழ் அரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பதில் பொதுச்செயலாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ள சுமந்திரன்,

“தங்களிடம் மூன்றிலிரண்டு (2/3) பெரும்பான்மை இருப்பதாகவும், தன்னிடம் நிறைவேற்று அதிகாரம் உள்ளதாகவும் ஜனாதிபதி மிரட்டுகின்றார். அதிகாரம் கெடுவிக்கும் முழுமையான அதிகாரம் முற்றிலும் கெடுவிக்கும். யாழ்ப்பாண மாநகர சபையில் 10/41 பெரும்பான்மை என்று சொல்லும்போது அவரது கணிதத் தகைமை வெளிப்படுகின்றது.” - என்று தெரிவித்துள்ளார்.

## அம்பாறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பவத்தில் சாவடைந்துள்ளார்.

மேற்படி நபர் வயலில் நெல் விதைக்கும் போது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தெஹியத்தகண்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## புல்மோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயர்தரம் கற்கும் மாணவன் இந்தப் பாடசாலையில் சாதாரண தரத்தில் கற்கும் இன்னுமொரு மாணவனைத் தாக்கிக் கழுத்தை அறுத்துள்ளார்.

தாக்குதலில் ஈடுபட்ட மாணவன் உடனடியாக பிரதேசத்தில் இருந்து தப்பியோடிவிட்டார் என்றும், இந்தத் தாக்குதலுக்குக் காதல் விவகாரமே காரணம் என்றும் பாதிக்கப்பட்ட மாணவனின் வகுப்பு சக பாடிகள் கூறினர்.

படுகாயமடைந்த மாணவன் முதலில் புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னெடுக்கவும் உத்தரவிடப்பட்டது.

அதன் தொடர்ச்சியாகவே, அங்கு அகழ்வாய்வுப் பணிகள் இன்று ஆரம்பிக்கப்பட்டன.

அங்கு இன்று அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு, மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், அடுத்து வரும் நாட்களில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இறுதி யுத்த காலமான 2009ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்பட்ட தமிழினப் படுகொலை வாரமாக மே 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரையான நாட்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட தமிழர் வாழும் பகுதிகளில் தமிழினப் படுகொலை வாரம் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டு வருகின்றது.

2009இல் முள்ளிவாய்க்காலில் இறுதி யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இலங்கை அரசின் திட்டமிட்ட தாக்குதல்கள் பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தியது. இதனால் மக்களுக்கு உணவு, மருந்து எதுவுமே கிடைக்காத அந்த நாட்களில் தமிழ் மக்களின் உயிரை காக்க பல்வேறு தொண்டு நிறுவனங்கள் வழங்கிய உப்புக் கஞ்சியே பிரதான உணவாக இருந்தது.

இந்தக் கஞ்சியைப் பெற்றுக்கொள்ள வரிசையில் நின்ற வேளைகளிலும் பொதுமக்கள் பலர் அரசு நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

இந்த வரலாற்று உண்மைகளை சர்வதேசத்துக்கும் எதிர்கால சந்ததிக்கும் எடுத்துக் காட்டுவதற்காகவே தமிழினப் படுகொலை வாரத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்படுகின்றது

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதிய தூதுக்குழுத் தலைவர்களாக, இந்தியாவிற்கான இலங்கை உயர் ஸ்தானிகராக ஜீ. எம். கொலொன்னே, பாகிஸ்தானுக்கான இலங்கை உயர் ஸ்தானிகராக ரியர் அட்மிரல் பிரெட் செனவிரத்ன, ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர் ஸ்தானிகராக எஸ். டீ. என். யூ.சேனாதீர, அமெரிக்காவின் நியூயோர்க் ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர பிரதிநிதியாக ஜயந்த ஜயசூரிய, கியூபாவுக்கான இலங்கைத் தூதுவராக ஆர். எம்.மஹிந்த ரத்நாயக்க, ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவராக பேராசிரியர் பி. ஜனக் குமாரசிங்க, ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான இலங்கைத் தூதுவராக பேராசிரியர் அருஷா கூரே ஆகியோர் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ரயில் மோதி பெண் சாவு!

கொழும்பு, மே 15

வலகம்பிட்டிய ரயில் நிலையத்துக்கு அருகாமையில் ரயில் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த மேற்படி பெண், ரயில் பாதையைக் கடக்க முற்பட்ட வேளையில் ரயில் மோதி மரணமடைந்துள்ளார்.

சிலாபம் - கொழும்பு வீதியாகச் சென்ற 'மந்தஹாமி' ரயில் மோதியே இந்தப் பெண் உயிரிழந்துள்ளார்.

# இலங்கைக்கான புதிய தூதுவர்கள் ஏழு பேர் நற்சான்று பத்திரங்களைக் கையளித்தனர்!




கொழும்பு, மே 15

இலங்கைக்குப் புதிதாக நியமனம் பெற்று வந்த தூதுவர்கள் 7 பேர் இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் உத்தியோகபூர்வமாக தங்களது நற்சான்று பத்திரங்களை கையளித்தனர்.

ஆஜன்டீனா குடியரசு, சிம்பாப்வே குடியரசு, இஸ்ரேல், பிலிபைன்ஸ் குடியரசு, டஜிகிஸ்தான் குடியரசு, கம்போடியா இராச்சியம் மற்றும் டென்மார்க் இராச்சியம் ஆகிய நாடுகளின் புதிய தூதுவர்களே இவ்வாறு நியமனம் பெற்றுள்ளனர்.

இன்று நற்சான்று பத்திரங்களைக் கையளித்த தூதுவர்களின் பெயர் விவரம் வருமாறு,

01. மாரியானோ அகுஸ்டின் கவ்சினோ - புதுடில்லியிலுள்ள ஆஜன்டீனா குடியரசின் தூதரகம்

02. ஸ்டெல்லா ந்கொமோ - புதுடில்லியில் உள்ள சிம்பாப்பே தூதரகம்

03. ரூவென் ஹவீயர் அசார் - புதுடில்லி இஸ்ரேல் தூதரகம்

04. நினா பி. கயிங்லெட் - டகாவிலுள்ள பிலிபைன்ஸ் துதரகம்

05. லுக்மொன் போபோகலொன்சோடா - புதுடில்லியிலிருக்கும் டஜிகிஸ்தான் குடியரசு தூதரகம்

06. ரத் மெனி- புதுடில்லியில் உள்ள கம்போடியா இராச்சியத்தின் தூதரகம்

07. ரஸ்மஸ் கிறிஸ்டென்சன் - புதுடில்லியிலுள்ள டென்மார்க் இராச்சியத்தின் தூதரகம்

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க உள்ளிட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

# வவுனியா சபைகளில் ஆட்சி அமைப்பு: தமிழரசு – சங்கு கூட்டணி இன்று பேச்சு



வவுனியா, மே 15

வவுனியா உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் இடம்பெற்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின் பின்னர் வவுனியா மாநகர சபை உட்பட ஏனைய சபைகளில் ஆட்சி அமைப்பதில் கட்சிகளுக்கு இடையில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் அந்த விடயம் தொடர்பாக தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் நோக்கத்துடன் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி மற்றும் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் வவுனியா தனியார் விருந்தினர் விடுதியில் இன்று ஒன்றுகூடினர்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் செந்தில்நாதன் மயூரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ப.சத்தியலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் முக்கியஸ்தர் க. சந்திரகுலசிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் க.துளசி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

# ஹிட்லர்கள்……

இல்லை. அவ்வப்போது சண்டை சச்சரவுகள் தோன்றும். ஆனாலும் நாங்கள் வெளியே துன்பப்படும் யூதர்களை விட மகிழ்ச்சியாக இருக்கிறோம். எங்களுக்குள் வருடப் பிறப்பு, பிறந்தநாள், திருமண நாள் போன்ற கொண்டாட்டங்கள் சிறிய அளவில் நடைபெறும். அதில் ஒருவருக்கொருவர் சிறிய பரிசுகளைக் கொடுத்து, பரிமாறிக்கொள்வோம். (என் அம்மாவின் பிறந்த நாள் பரிசாக ஓர் இனிப்புச் செய்வதற்கு, நான் ஒரு மாதம் சர்க்கரையும் வெண்ணெய்யும் சாப்பிடாமல் சேர்த்து வைத்தேன்!)

அன்று பீரங்கிகளின் சைரன் ஒலி காதைக் கிழித்தது. வானில் போர் விமானங்களின் உறுமல். என் உடல் நடுங்கியது. நள்ளிரவு வரை குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது. கண்ணீர் விடுவதைத் தவிர என்னால் என்ன செய்ய முடியும்?

நாங்கள் ரகசிய அறைக்கு வந்து ஒரு வருடமாகிவிட்டது. ஆனால் எங்கள் நிலைமைதான் மோசமாகிக்கொண்டே வருகிறது. இரண்டாம் உலகப் போரின் விளைவால் உணவுப் பற்றாக்குறை. பொருள்களின் விலை எங்கோ சென்றுவிட்டது. நாங்கள் உணவைச் சுருக்கிக்கொண்டோம். சில நாள்கள் உருளைக் கிழங்கு மட்டும் சாப்பிடுவோம். சில நாள்கள் பயறுகளை உண்போம். நேற்று எங்களுக்குக் காய்கறி கொடுக்கும் நண்பரை இராணுவம் பிடித்துச் சென்றுவிட்டது. இனி காய்கறிகளும் கிடைக்காது. ஒரு சாதாரண ரொட்டி சாப்பிட்டு எவ்வளவு காலமாகிவிட்டது!

எங்களின் ஆடைகள் பழசாகிவிட்டன. என் உடை மிகவும் குட்டையாகி விட்டது. செருப்பு போட முடியவில்லை. குளிருக்கு இதமான கம்பளிகள் இல்லை. எனக்குக் கண்பார்வை கோளாறு வந்துவிட்டது.

தலைமறைவு வாழ்க்கையில் இன்னொரு சங்கடம் திருடர்கள் யாராவது கீழ்த்தளத்துக்கு வரும்போது எங்கள் இதயமே நின்றுவிடும். எங்களைக் கண்டுபிடித்துவிட்டால் என்ன செய்வது? தலைமறைவு வாழ்க்கையில் திருடர்களைக் கண்டு அஞ்சத்தான் முடியுமே தவிர, கூப்பாடு போட முடியாது. திருடர்கள் வந்தால் பயம். புதியவர்கள் வந்தால் பயம். கீழே மராமத்து பணி செய்ய வந்தால் பயம். சாவதை விட எப்போது சாவோம் என்று காத்திருப்பது கொடுமையானது.

எத்தனைக் கஷ்டங்கள் வந்தாலும் மனித மனம் அதிலிருந்து விடுபடவே எண்ணும். ஆம், எனக்குள்ளும் சந்தோஷமான விஷயங்கள் நிகழ்கின்றன. பீட்டர். வாண்ட்டானின் மகன்தான் பீட்டர். ஆரம்பத்தில் எனக்கு அவனைப் பிடிக்கவில்லை. நாள் ஆக ஆக அவனை எனக்குப் பிடித்துவிட்டது. என் வயது அப்படிப்பட்டது என்று நினைக்கிறேன். சில நேரங்களில் நான் அவனை மிகவும் நேசிக்கிறேன். ஆனால் சில நேரங்களில் அவன் குறைந்த புத்திசாலித்தனத்துடனும் சற்று சோம்பேறித்தனமாகவும் இருப்பதாக எண்ணுகிறேன்.

என் சிந்தனைகள் வேறு பீட்டரின் சிந்தனைகள் வேறு. இவன் எனக்கு ஒத்துவரமாட்டான் என்றும் தோன்றுகிறது.. ஆனாலும் அவனுடன் நட்பு கொள்வது எனக்கு இந்தச் சூழலில் மகிழ்ச்சியளிப்பதாகவே இருக்கிறது.

இன்னொரு விஷயம் நானும் அக்காவும் சுருக்கெழுத்தில் நன்றாகத் தேர்ச்சி பெற்றுவிட்டோம். என்னைப் பெரிய பெண்ணாக அங்கீகரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அக்கா படிக்கும் சில புத்தகங்களை நான் வாசிக்க அனுமதி கிடைத்திருக்கிறது. கிரேக்க, ரோமானிய புராணங்கள் என்னைக் கவர்கின்றன. புகழ்பெற்ற நாவல்களை வாசிக்கிறேன்.

போர்ச் சூழல் ஒன்றும் திருப்திகரமாக இல்லை. யூதர்கள் வேட்டையாடப்பட்டு, கண்காணா வதை முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள் என்று செய்தி கேள்விப்படும்போது என் இதயம் வெடித்துவிடுவது போல இருக்கிறது. சில முகாம்களில் நச்சுப் புகையைச் செலுத்தி கூட்டம் கூட்டமாகக் கொன்று விடுகிறார்கள். என் நண்பர்கள் குளிரில் அடி வாங்கி வாங்கி மடிந்துபோகும்போது, நான் மட்டும் இந்தப் பாதுகாப்பான இடத்தில் சொகுசாக வாழ்வது நியாயமா?

பள்ளிக்குச் சென்ற பிள்ளைகள் திரும்பி வரும்போது பெற்றோர் காணாமல் போயிருப்பார்கள். கடைக்குச் சென்ற மனைவி திரும்பி வரும்போது வீடு பூட்டியிருக்கும். பெற்றோரைத் தேடி குழந்தைகள் அழும் ஓலம் என்னவோ செய்கிறது. வீதியில் விழும் பிணங்களை அகற்றுவதே பெரிய வேலையாக இருக்கிறது என்கிறார்கள். சே! போர் எவ்வளவு கொடூரமானது? பூகோளமே போரில் ஈடுபட்டிருக்கிறதே தன் நாட்டு மக்களையே அழித்தொழிக்கும் கொடூரத்தைப் போரில் மட்டுமே காண முடியும். போர் இரக்கமற்றது. அதுக்கு நியாய, தர்மங்கள் கிடையாது. போரால் யாருக்கும் எந்தப் பலனும் ஏற்படப் போவதில்லை.

நாங்கள் செய்த பாவம் என்ன? யூதர்களாகப் பிறந்தது எங்கள் குற்றமா? ஒரு கிறிஸ்தவன் தவறு செய்தால்




அது அவனுடைய தவறாக மட்டும் பார்க்கப்படுகிறது. ஆனால் ஒரு யூதன் தவறு செய்தால் ஒட்டு மொத்த யூதர்களுமே தவறு செய்தவர்களாகி விடுகிறார்கள். ஒருவேளை யூதர்களுக்கு அதிகாரம் கிடைக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். லட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்த ஹிட்லரைக் கூட நாங்கள் மன்னித்துவிடுவோம்!

தலைவர்கள், அரசியவாதிகள், பெரு முதலாளிகள் மட்டும் இந்தப் போருக்குப் பொறுப்பாளர்கள் இல்லை மக்களுக்கும் இதில் பங்கிருக்கிறது. இல்லை என்றால் இந்தப் போருக்கு எதிராக மக்கள் புரட்சி செய்திருக்க மாட்டார்களா? மனிதனுக்குள் அழித்தொழிக்கக்கூடிய கொடிய மனப்பான்மை இருக்கும் வரைக்கும் உலகில் அழகான அனைத்து விஷயங்களும் அழிந்துகொண்டேதான் இருக்கும்.

என்னைப் பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன். டயரி எழுத ஆரம்பித்தபோது இருந்த ஆன் வேறு இன்று இருக்கும் ஆன் வேறு. அடிக்கடி அம்மாவிடம் சண்டை போடும் ஆன் இப்போது இல்லை. என்னுடைய உடல் வளர்ந்ததைப்போலவே என் சிந்தனைகளும் வளர்ந்திருப்பதை உணர முடிகிறது. அரசியலில் ஆர்வம் இருக்கிறது. நிறைய படிக்கிறேன். நிறைய தெரிந்துகொள்கிறேன். பலமும் துணிச்சலும் உள்ள பெண்ணாக மாறியிருக்கிறேன். எல்லோரையும் புரிந்துகொள்கிறேன்.

எதிர்காலத்தில் நான் என்னவாக வர விரும்புகிறேன்?

என் அம்மா போன்ற மற்ற பெண்களைப் போல் பிறந்தோம், வாழ்ந்தோம் என்று என்னால் இருக்க முடியாது. ஒருநாளும் மறந்து போகக்கூடிய ஒரு சாதாரணப் பெண்ணாக நான் வாழ்ந்து, சாக விரும்பவில்லை. எதிர்காலத்தில் குடும்ப வாழ்க்கைக்கு அப்பால் நான் எதையாவது செய்யவேண்டும்.

எழுத்தாளர். ஆம், நான் சிறுகதைகள் நிறைய எழுதி வைத்திருக்கிறேன். ஒரு நாவல் எழுதும் முயற்சியிலும் இறங்கியிருக்கிறேன். (ஒரு சிறுமி எழுதும் நாவலை யாரும் விரும்புவார்களா என்ன!) இரண்டு ஆண்டுகளாக நான் கிட்டியிடம் டயரியில் பகிர்ந்துகொண்ட விஷயங்களை ஒரு புத்தகமாகக் கொண்டுவரும் எண்ணத்தில் இருக்கிறேன். இறந்த பிறகும் வாழ வேண்டும் என்றால் ஓர் எழுத்தாளரால்தான் சாத்தியம்.

அதேபோல பத்திரிகையாளராகவும் ஆசை. எழுத்து மூலம் அனைத்தையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரமுடியும் என்று நம்புகிறேன். எழுத்தின் மூலம் என் துயரங்கள் மறைவது போல, உலகத்தின் துயரத்தை என்னால் துடைக்க முடியும். இது சாத்தியமா?

ஐயோ இந்த நாள் மிகவும் துயரமானது. யாரோ எங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டனர். படையினர் வந்து எங்களை இழுத்துச் சென்றனர். ஆண்கள் ஒரு வண்டியிலும் பெண்கள் ஒரு வண்டியிலும் ஏற்றப்பட்டோம். யாரும் யாருக்கும் ஆறுதல் சொல்லும் நிலையில் இல்லை. எங்களை இந்த நிலைக்குத் தள்ளியது யார்? மனிதர்களில் சிலர் உயர்ந்தவர்கள், சிலர் தாழ்ந்தவர்கள் என்று பிரித்தது யார்? யூதர்களின் பொறுமைதான் அவர்களின் பலவீனம். இந்தப் பலவீனத்தால் பலசாலிகள் எளிதில் வென்றுவிட்டனர்.

பாதிக்கப்பட்டவர்களை எட்டியிருந்து பார்த்த நான், இன்று பாதிக்கப்பட்டவளாக வதை முகாமுக்குச் செல்கிறேன். வதை முகாம் பற்றிச் சொல்ல எனக்கு இப்போது திடம் இல்லை. டைபஸ் என்ற நோய் முகாமில் பரவி வருகிறது. வரிசையாக மரணம் ஒவ்வொருவரையும் ஆட்கொள்கிறது. என் அக்கா இறந்த ஒரு மாதத்தில் நான் மடிந்து போனேன். என் அம்மாவும் இறந்து போனார். ஆண்கள் சிறையில் பீட்டரும் இறந்து போனான்

என் அப்பா?

பல லட்சம் உயிர்களைக் குடித்த பிறகு, இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது. தப்பிப் பிழைத்தவர்களில் என் அன்பு அப்பாவும் ஒருவர். வதை முகாமிலிருந்து வெளியே வந்தவர் எங்களைப் பற்றிய செய்திகளை அறிந்துகொண்டார். நாங்கள் வசித்த ரகசிய அறைக்கு வந்தார். மகிழ்ச்சியான குடும்பம் வசித்த அந்த இடத்தில் இப்போது வெறுமை குடிகொண்டிருந்தது.

எங்கள் குடும்ப நண்பர் மையீப் கையிஸ் அப்பாவைச் சந்தித்தார். நாங்கள் வதை முகாம்களுக்குச் சென்ற பிறகு, எங்கள் அறைக்கு வந்து, என் டயரியை எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்திருந்தார். என் அப்பாவிடம் டயரியை ஒப்படைத்தார். என் டயரியைப் படித்த அப்பாவால், ஒரு தகப்பனாக தன் துயரத்தைத் தாங்கமுடியவில்லை. தன் மகளின் எழுத்தாற்றலும் நாஸிப் படைகள் நிகழ்த்திய கொடூரங்களும் வெளியுலகுக்குத் தெரிய வேண்டும் என்று விரும்பினார். புத்தகமாகக் கொண்டுவந்தார்.

1945, 15 வயதில் நான் இறந்து போனேன். ஆனால் இன்று உலகம் முழுவதும் 60க்கும் மேற்பட்ட மொழிகளில் என்னுடைய புத்தகத்தின் மூலம் வாழ்ந்து வருகிறேன். உலகம் முழுவதும் அதிகம் விற்கப்பட்ட 10 புத்தகங்களில் என்னுடைய புத்தகமும் ஒன்று. நான் நினைத்தது போல சிறந்த எழுத்தாளராக வேண்டும் என்ற என் கனவு நிறைவேறிவிட்டது.

தோழிகளே ஒரு நிமிடம் எழுத்தாளர் என்பது மட்டுமே என் கனவு அல்ல. நான் சொல்ல வந்த செய்தி, இனத்தின் பெயரால் எந்த ஒரு மனிதரும் இனி சாகக்கூடாது எந்தக் காரணத்துக்காகவும் இந்தப் பூமியில் போர் நிகழக்கூடாது என்பதற்காகத்தான். இனத்தின் பெயரால் உயிரை இழந்த கடைசி மனிதர்கள் நாங்களாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் இன்றும் இனத்தின் பெயரால் நடைபெறும் படுகொலைகளும் அழித்தொழிப்புகளும் தொடர்ந்த வண்ணம்தான் உள்ளன. என்னைப் போல் எத்தனையோ லட்சம் பேர் பலியாகிக்கொண்டுதான் இருக்கிறர்கள். சாத்தியமாகாத கனவா என்னுடையது? ஆம், ஹிட்லர்கள் ஒருபோதும் மரிப்பதில்லை!







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.05.2025 வெளியிடப்பெற்றது.